**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**2023–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4–ம் நாள் திங்கள்கிழமை**

**ஐ.ஏ.எண்.05/2023**

**இன்**

**ஐ.ஏ.எண்.02/2023**

**இன்**

**அ.வ.எண்.6/2023**

முகம்மது ஜானி ....மனுதாரர்/மனுதாரர்/வாதி

/எதிர்/

ஆர்.ராஜகோபால் .......எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் 14.08.2023–ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.முகமது சுல்தான் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் B.ரேஸ்மா அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களையும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் உவிநமுச கட்டளை 151 சிபிசி படி இ.ம.எண்.2/2023 மனுவை Reopen செய்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்</u> :–**

i) மனுதாரர் விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகார மனு

இ.ம.எண்.3/2023 என்று நம்பர் செய்து, 10.04.2023ம் தேதியன்று மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பிலும், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பிலும் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவின் மீதும் வாதுரைகள் நீதிமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்டுள்ளன.

ii) எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதுரைகள் எடுத்து வைக்கும்பொழுது, தாவா சொத்து மனுதாரரின் மனைவியான காமிலாகனி என்பவர் தனது மகனான முகமது இலியாஸ் என்பவர் பெயரில் தாவா சொத்தைப்பொறுத்து இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருப்பதாக வாதுரை செய்து, நீதிமன்றத்தின் கவனத்தை திசை திருப்ப முயற்சி செய்து வருகிறார். மேலும் மனுதாரர்/மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள பிராது பக்கம் 4ல் பாரா 6ல் காமிலாகனி ஏற்படுத்திய இனாம்செட்டில்மெண்ட் பத்திரத்தின் விவரம் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால் காமிலாகனி பத்திரத்தை மறைத்து, ஷை விபரத்தை பிராதில் சொல்லாமல் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனவே எதிர்மனுதாரர் நீதிமன்றத்தை ஏமாற்றி mislead செய்து வழக்கு தாக்கல் செய்திருப்பதாக வாதுரை எடுத்து வைத்துள்ளார்.

iii) உபயதரப்பினர்களின் வாதுரைகள் கேட்ட பின்பு, நீதிமன்றம் 18.04.2023ம் தேதி இ.ம.எண்.3/2023 தீர்ப்பு பகர வாய்தா ஏற்படுத்தியிருக்கிறார். இந்நிலையில் எதிர்மனுதாரரின் விவாதத்தின் அடிப்படையில் மனுவை தொடர்ந்த நடத்தினால், மனுதாரருக்கு பாதகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே மனுதாரரின் மனைவியான காமிலாகனி அவரின் மகனான முகமது இலியாஸ் என்பவர் பெயரில் ஏற்படுத்திய இனாம்செட்டில்மெண்ட் பத்திரத்தை தாக்கல் செய்து, சட்டப்படி அதன் உண்மை தன்மைகளையும் சட்ட விளக்கங்களையும் நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டியுள்ளது. மேற்படியாளர்கள் பேரில் ஏற்பட்ட ஆவணத்தினை பற்றிய விவரத்தை நீதிமன்றத்தில் விரிவாக வாதம் எடுத்து வைப்பது அவசியமாக இருக்கிறது. இல்லாது போனால் இந்த மனுதாருக்கு ஈடுசெய்ய முடியாத பெருத்த கஷ்ட, நஷ்டமும், பேரிழப்பும் ஏற்பட்டுவிடும். மேலும் எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு மேற்கே A.S.முகமது சும்சுலின் ஆலிம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் தற்தவேசை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அதனுடைய விஸ்தீரணம், நான்கு எல்லை

இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தெளிவான வாதம் எடுத்து வைக்க வேண்டியிருக்கிறது.

iv) மேற்சொன்ன இரண்டு தஸ்தவேசுகளும் மனுதாரர் மனு விபரங்களையும் வழக்கின் விவரங்களையும் நீதிமன்றத்திற்கு தெளிவாக நிர்பணம் செய்யக்கூடிய ஆவணங்களாக இருக்கிறது. மேற்சொன்ன இரு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, கூடுதலாக மனுதாரர் தரப்பில் வாதுரை எடுத்து வைத்து, நீதிமன்றம் திருப்தியுறும் வகையில், நீதிமன்றத்தில் வாதுரை செய்வது மிகவும் அவசியமாக இருக்கிறது. இல்லாது போனால் மனுதாரர் பாத்திய அனுபவங்களுக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டு விடும். எனவே உத்தரவிற்காக உள்ள இ.ம.எண்.2/2023 மனுவை ரீ ஓபன் செய்து உத்தரவிடுமாறு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

i)மனுதாரர் சுத்தமான கரத்துடன் நீதிமன்றத்தை அணுகவில்லை.

ii)அபிடவிட் 4 வது பாராவில் காமிலாகனி தனது மகனான முகம்மது இலியாஸ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் விபரம் சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று கூறிவிட்டு பின் அபிடவிட் 5 வது பாராவில் எதிர்மனுதாரரின் விவாதத்தின் அடிப்படையில் மனுவை தொடர்ந்து நடத்தினால் மனுதாரருக்கு பாதகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது என்றும், மேற்படி காமிலாகனி தனது மகனாக முகம்மது இலியாஸ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை தாக்கல் செய்து சட்டப்படி அதன் உண்மை தன்மைகளையும் சட்ட விளக்கங்களையும் நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டியுள்ளது என்றும் குறிபிட்டுள்ளார். மேற்படி மனுவாதி சொல்லியுள்ளவாறு ஷை இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் விவரத்தை தனது தாவாவில் சொல்லியிருப்பின் திரும்ப திரும்ப ஷை பத்திரம் பற்றிய விளக்கங்கள் தர வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஷை இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை இந்த

எதிர்மனுதாரர் ஷை மனுவில் தாக்கல் செய்து நீதிமன்றத்தால் மேற்கே A.S.முகம்மது சல்சுலின் ஆலிம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் தஸ்தவேசை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதனுடைய விஸ்தீரணம், நான்கு எல்லை இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தெளிவான வாதம் எடுத்து வைக்க வேண்டியிருக்கிறது என்றும் குறிபிட்டுள்ளார். இந்த எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு மேற்கே அமைந்திருக்கும் A.S.முகம்மது சும்சுலின் ஆலிம் அவர்களின் சொத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. மேற்படி A.S.முகம்மது சம்சுலின் ஆலிம் அவர்களின் சொத்தைப் பொறுத்து மனுவாதி தனது தாவாவில் குறிப்பிடாத சூழ்நிலையில் தற்போது ஷை மனு தாக்கல் செய்து ஷையாளரின் சொத்தை பொறுத்தும் நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டும் என்று சொல்வது சட்டப்படி ஏற்புடையதல்ல.

Iii) மேற்படி மனுவில் சொல்லப்பட்டுள்ள இரண்டு தஸ்தவேசுகளில் ஒன்றான முகம்மது இலியாஸ் பெயரிலுள்ள இனாம் செட்டில்மெண்ட் பற்றி ஏற்கனவே நீதிமன்றத்தில் விரிவான தெளிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளது. மற்றோரு தஸ்தவேசு A.S.முகம்மது சம்சுலின் ஆலிம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து பற்றிய விளக்கங்களை நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டும் என்று மனுவாதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் மனுவாதி வேண்டுமென்றே தாவாவிற்காக பொய் மற்றும் கற்பனையான சங்கதிகளை கூறி வீணாக வழக்காடி வருகிறார். மனுவாதிக்கு மேற்படி I.A.No.3/2023 மனுவை Reopen செய்ய எவ்வித தகுதியும், அவசியமும் கிடையாது. உண்மை விவரங்களை மறைத்தும், பொய் விபரங்கள் அடிப்படையில் வீண் வழக்காடியும், பொறாமையின் பேரில் இந்த எதிர்மனுவாதியே அலைக்கழிக்க வேண்டுமென்றே கெட்ட நோக்கில் மனுவாதி அநீத தாவா மற்றும் மனுக்கள் தாக்கல் செய்து வழக்காடி வருகிறார்.

iv) மனுவாதிக்கு தாவா சொத்தின் மேலுள்ள உரிமையே முடிவு செய்யாமல் இருக்கும் நிலையில் மனுவாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் I.A.No.3/2023(Commission petition) மற்றும் I.A.No.2/2023(Temporary Injunction petition) ஆகிய இரு மனுக்களிலுமே மனுவாதிக்கு எவ்வித முதல் நிலை வழக்கோ, வேறு சமநிலை வாய்ப்போ எதுவும் கிடையாது. ஷை இரு மனுவாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஷை Reopen மனுவினையும் allow செய்ய எவ்வித அவசியமும்

ஏற்படவில்லை. ஷை மனுவும் தள்ளுபடி செய்ய வேண்டிய மனுவாகும். The Hon'ble Supreme Court of India in its judgment in Bachhaj Nahar vs Nilima Mandal & Ors on 23 September, 2008–11th para " It is wll settled that in the absence of pleading, evidence, if any, produced by the parties cannot be considered. It is also equally settled that no party should be permitted to travel beyond its pleading and that all necessary and material facts should be pleaded by the party in support of the case set up by it. The object and purpose of pleading is to enable the adversary party to know the case it has to meet"

v) Thus According to the Respondent/Defendant this petition is only an attempt on the part of the petitioner/plaintiff to fill up the lacuna in the I.A.No.3/2023 and I.A.No.2/2023 petitions and plaint which is filed by the petitioner/plaintiff this Hon'ble court. Hence, this petition is liable to be dismissed. அதனால் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யும்படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) <u>பிரச்சினை</u> :–**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :–**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் அதன் தொடர்ச்சியாக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இ.ம.எண்.2/2023 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை மனுவில் இருதரப்பிலும் வாதம் கேட்கப்பட்டு உத்தரவிற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்பதில் இருதரப்பிலும் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

இந்நிலையில் மேற்படி இ.ம.எண்.2/2023 மனுவில் வாதுரை செய்யும்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரை தபசில் சொத்தானது மனுதாரர்/வாதிக்கு 08.08.2011ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டதா

இல்லை, காமிலாகனி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு தனது மகனான முகமதுஇலியாஸ்க்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் படி பாத்தியமான என ஆட்சேபனை செய்துள்ளார். அதனால் காமிலாகனி எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தையும், மேலும் தாவா சொத்திற்கு மேற்கே உள்ள A.S.முகமது சல்சுலின் ஆலிம்க்கு பாத்தியப்பட்ட சொத்திற்குரிய ஆவணத்தையும், இ.ம.எண்.2/2023 தாக்கல் செய்தற்காக இந்த ரீ ஓபன் மனுவை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார்.

அதேவேளையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர்/வாதி சுத்தமான கரத்துடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. மனுதாரர்/வாதி இ.ம.எண்.2/2023 மனுவில் தாக்கல் செய்வதாக சொல்லப்பட்டுள்ள ஆவணமான காமிலாகனிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு தனது மகனான முகமது இலியாஸ்க்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் தாவா சொத்திற்கு மேற்கே உள்ள A.S.முகமது சல்சுலின் ஆலிம்க்கு பாத்தியப்பட்ட சொத்திற்குரிய ஆவணமானது தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாதது. அதனால் எதிர்மனுதாரர்/பிரதிவாதியை அலைகழிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த ரீ ஓபன் மனுவை தாக்கல் செய்துள்ளார் என ஆட்சேபிக்கப்பட்டது.

மேற்படி இருதரப்பிலும் சொல்லப்பட்ட சங்கதிகளை நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது,. ஷை வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இ.ம.எண்.2/2023 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை மனுவில் இருதரப்பிலும் வாதம் கேட்கப்பட்டு உத்தரவிற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இந்த இ.ம.எண்.2/2023 மனுவை ரீ ஓபன் செய்ய சொல்லி மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் இ.ம.எண்.2/2023 யை ரீ ஓபன் செய்வதற்கு சொல்லப்பட்ட காரணமானது தாவா சொத்தானது மனுதாரர்/வாதிக்கு 08.08.2011ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டதா இல்லை, காமிலாகனி

என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு தனது மகனான முகமதுஇலியாஸ்க்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் படி பாத்தியமானதா என எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த காமிலாகனி ஏற்படுத்தி செட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்வற்காகவும், மேற்கே உள்ள A.S.முகமது சல்சுலின் ஆலிம்க்கு பாத்தியப்பட்ட சொத்திற்குரிய ஆவணத்தையும் தாக்கல் செய்வதற்காகவும், உத்தரவிற்காகவும் உள்ள இ.ம.எண்.2/2023 ரீஓபன் செய்யவேண்டும் என கூறியுள்ளார். அதேவேளையில் பிரதிவாதி/எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி காமிலாகனி ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தை எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்திருப்பதாலும், மேற்கே உள்ள A.S.முகமது சல்சுலின் ஆலிம்க்கு பாத்தியப்பட்ட சொத்திற்குரிய ஆவணம் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாததாலும் இந்த ரீ ஓபன் மனு ஏற்கத்தக்கதல்ல என ஆட்சேபிக்கப்பட்டிருந்தாலும்,

இருதரப்பு வழக்காவணங்கள் மற்றும் இருதரப்பிலும் pleadings ல் சொல்லப்பட்ட சங்கதிகளிலும் இருந்து இந்த வழக்கு பிரச்சனையானது அடி அளவுகள் மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கட்டிடத்திற்கு கிழக்கே உள்ள சுவரினை ஒட்டி மனுதாரர்/வாதி தனி சுவர் தென்வடலாக கட்டி வருகிறார். அதனால் இருதரப்பினர்களுக்கும் இடையே அடி அளவுகள் சம்பந்தமாக dispute இருப்பதால் மேற்படி தாவா சொத்திற்கு மேற்கே உள்ள A.S.முகமது சல்சுலின் ஆலிம்க்கு பாத்தியப்பட்ட சொத்திற்குரிய ஆவணம் இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையுடன் தொடர்புடையதாக இருப்பதால் இம்மனு அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மாறாக எதிருரையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஆட்சேபிக்கப்பட்ட மற்ற சங்கதிகளை இந்த மனுவில் தீர்மானம் செய்யமுடியாது. வழக்கினை முழுமையாக விசாரணை செய்தால் தான் தீர்மானம் செய்யமுடியும்.

7. மேலும், இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் வழக்கின் தரப்பினரான மனுதாரர்/வாதிக்கு ஒரு வாய்ப்பு அளித்து இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. எனவே நீதியின் நலனை கருத்தில்கொண்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**மனுதாரர்கள்/வாதிகள் வரும் 19.09.2023ம் தேதிக்குள் செலவுதொகையாக ரூ.500/-யை எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு செலுத்தும் பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும். தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.**

**மீண்டும் அழைக்க 19.09.2023.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-S.Ilayaraja,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி :-** **இல்லை**

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் :-** **இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணம் :-** **இல்லை**

Sd/-S.Ilayaraja,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
ஐ.ஏ.எண். 01 /2022
இன்
அ.வ.எண்.6/2016
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:25.07.2023